S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions
Accurately Dispensed
* * *
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2202 கார்த்திகை 04 புதன்கிழமை [20-11-1991] UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 351

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாகக் கொடுப்பவர்கள்
* * *
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

தமிழீழ காவல்துறை அங்குரார்ப்பணம்!

அணிவகுப்பு மரியாதையை நேற்று தலைவர் பிரபாகரன் ஏற்றார்

யாழ்ப்பாணம், நவம்பர் 20

தமிழீழ காவல்துறை நேற்று உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற தமிழீழ காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஏற்றுக்கொண்டார், அதனையடுத்து காவல்துறை உத்தியோகபூர்வமாக இயங்க ஆரம்பித்தது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் ஓரிடத்தில் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ளும் வைபவம் சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது.

தமிழீழத் தேசியத் தலைவர் என்ற முறையிலும் விடுதலைப் புலிகளின் தலைவர் என்ற முறையிலும் திரு. வே. பிரபாகரன், தமிழீழ காவல் துறையில் பயிற்சி முடித்து வெளியேறும் முதல் அணியின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தையா), அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம்

[3 ஆம் பக்கம் பார்க்க]

நீதிமன்ற அமைப்பு விரைவில் உருவாகும்

யாழ்ப்பாணம், நவ. 20

தமிழீழ காவல்துறை செயற்பட ஆரம்பித்திருப்பதை அடுத்து தமிழீழ நீதிமன்ற அமைப்பு ஒன்று விரைவில் உருவாக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு மேற்கொள்ளும் சோதனை விசாரணை, குற்றத்தடுப்பு போன்ற நடவடிக்கைகளை தமிழீழ காவல்துறை மேற்கொள்ளும்.

இந்த நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக தமிழீழ நீதிமன்ற அமைப்பு விரைவில் உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ)

எட்டு இடங்களில் காவல் நிலையங்கள்

யாழ்ப்பாணம், நவ. 20

தமிழீழ காவல்துறை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதை அடுத்து குடாநாட்டின் முக்கிய எட்டு இடங்களில் காவல் நிலையங்கள் திறக்கப்பட இருக்கின்றன.

முதல் காவல் நிலையம் விரைவில் யாழ் நகரப் பகுதியில் திறக்கப்படும்.

தொடர்ந்து சுன்னாகம், சங்கானை, கோப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, பளை ஆகிய இடங்களில் ஆரம்பக் கட்டமாகக் காவல் நிலையங்கள் திறக்கப்படும்.

(8ஆம் பக்கம் பார்க்க)

இந்தியத் தரப்புடனும் தொண்டா பேசுவார்!

கொழும்பு, நவ. 20

விடுதலைப் புலிகளுடன் அமைச்சர் தொண்டமான் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தை குறித்து புதுடில்லியில் இந்திய அரசுடன் பேச முற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வார இறுதியில் அவர் புதுடில்லி புறப்படுவதற்கு முன்னர் இதுபற்றி அவரிடம் கேட்டபோது —

"விடுதலைப் புலிகளுடனான உத்தேச பேச்சுக்கள் பற்றி இந்தியா கேள்வி எழுப்பினால் இந்தியாவுடன் அது பற்றி நான் பேச இருக்கிறேன்" — என்று அவர் பதிலளித்தார்.

விடுதலைப் புலிகளிடமிருந்து இந்தியா தூரச் சென்றுகொண்டிருப்பதால், தாம் விடுதலைப் புலிகளுடன் நடத்தவிருக்கும் உத்தேசப் பேச்சுவார்த்தை பற்றி இந்

(3 ஆம் பக்கம் பார்க்க)

முயற்சியில் வென்றால் தொண்டா பிரதமர்!

கொழும்பு, நவ. 20

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் தமது முயற்சியில் அமைச்சர் தொண்டமான் வெற்றி பெற்றால் அதற்கு பரிசாக அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்படலாம் என்று கொழும்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி அமைச்சர் தொண்டமானிடம் கேட்டபோது —

"ஏற்கனவே நான் சக்தி மிகுந்த நிலையில் தான் இருக்கின்றேன். ஆகவே நான் பிரதமரானாலும் அவ்வளவு வித்தியாசத்தை ஏற்படுத்தி விடாது" — என்று பதில் அளித்தார். [உ-ஏ]

மாவீரர் வாரத்தை முன்னிட்டு

1,100 குடும்பங்களின் மீட்பு நிதி மீளளிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 20

தமிழீழ மீட்பு நிதிக்குத் தாமாகவே மனமுவந்து பங்களிப்புச் செய்தவர்களில் ஆயிரத்து நூறு குடும்பத்தினருக்கு, நாளை ஆரம்பமாகும் மாவீரர் வாரத்துடன் மீளளிப்புச் செய்யப்படும்.

இத்தகவலை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உலகின் எந்தவொரு முதன்மை மக்களினத்திற்கும் சற்றும் சளைக்காத வகையில் வீரமும் பொறுமையும், அறிவாற்றலும் முயற்சியும் தமிழீழ மக்களிடம் உண்டு. தமிழீழ மண்ணின் விடுதலைக்காக, தமிழினத்தின் அடிமை விலங்கை அறுப்பதற்காக இவை அனைத்தும் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

எல்லோருக்கும் தமிழீழம் வேண்டும். ஆனால் எவரும்

(3 ஆம் பக்கம் பார்க்க

கொழும்பில் தொண்டமான் பலதரப்பினருடனும் பேச்சு!

கொழும்பு, நவ. 20

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கு முன்னர், கொழும்பில் பல தரப்பினருடனும் அமைச்சர் தொண்டமான் பேச்சு நடத்தி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த வார இறுதியில் புதுடில்லி புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் அவர் இப்பேச்சுக்களை நடத்தினார்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் அனுப்பப்பட்ட பதில் கடிதம் குறித்து கடந்த வார ஆரம்பத்தில் — திங்களன்று — ஜனாதிபதி பிரேமதாசவுடன் அமைச்சர் தொண்டமான் கலந்தாலோசித்தார்.

அரசாங்கம் தனது யோசனைகளை முன்வைக்க வேண்டிய தருணம் இது என்று தொண்டமான் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் கூறினார்.

அதற்கு ஜனாதிபதி பிரேமதாசா —

"இந்த விடயம் பரிசீலனை செய்யப்படும். அதேநேரத்தில் எதிர்க் கட்சிகளைச் சந்தித்து அவற்றின் யோசனைகளை பெற்றுக்கொள்ளுங்கள்" — என்று திரு. தொண்டமானுக்கு கூறினார்.

அனுராவுடன்

இவ்வாறே திரு. தொண்டமான் கடந்த வாரம் செயற்பட்டார்.

கடந்த வியாழக் கிழமை பதில் எதிர்க் கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்காவுடன் திரு. தொண்டமான் பேசினார்.

பிரச்சினையை ஒரேயடியாகத் தீர்ப்பதற்குரிய நேரம் இது என்று திரு. தொண்டமான் அனுராவிடம் எடுத்துக்

[8 ஆம் பக்கம் பார்க்க]

பலாலியில் ஷெல்!

யாழ்ப்பாணம், நவ. 20

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று இரவு 8 மணிக்கு சுற்றுப் புறக் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சேத விவரங்கள் தெரியவரவில்லை.

[உ-15]

தபால் பொதிகள் வந்தன

நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த குமாரி கப்பலில் 850 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

[உ-5

சரித்த ரத்வத்தை நாளை காங்கேசனுக்கு வருகிறார்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ் மாவட்டத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களை காங்கேசன் துறைமுகத்துக்குக் கப்பலில் கொண்டுவருவதற்கு முன்னோடியாக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. சரித்த ரத்வத்தை நாளை வியாழக்கிழமை துறைமுகப் பகுதிக்கு விஜயம் செய்கிறார்.

அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன், புனர்வாழ்வு அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளும் வருகிறார்கள் என அறிய வந்தது.

கப்பலில் கொண்டு வரப்படும் பொருள்களை இறக்குவதற்கான வசதிகள், களஞ்சிய வசதிகள், மற்றும் மேலதிகமாகத் தேவைப்படும் வசதிகள் குறித்து திரு. ரத்வத்தையும் குழுவினரும் கண்டறிவர்.

உணவுப் பொருள்களைக் காங்கேசன் துறைமுகத்துக்கு கொண்டு வருவது குறித்து கடந்த வாரம் அரசாங்கத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

வேலணை ஆசிரியர்களின் சம்பளம் இராணுவத்திடம்!

யாழ்ப்பாணம், நவ. 20

வேலணை கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்குரிய நவம்பர் மாதச் சம்பளப் பணமான முப்பது லட்சம் ரூபா, தீவுப் பகுதிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிக்கு அனுப்பப்பட்டுவிட்டதாம்!

கல்வித் திணைக்கள வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

வேலணைக் கோட்டத்துக்குப் பொறுப்பான கல்வி அதிகாரிகள் இராணுவத்திடமிருந்து பணத்தைப் பொறுப்பேற்று சம்பளத்தை வழங்கலாம் என்று கொழும்பிலிருந்து கல்வித் திணைக்கள அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு அறிவித்துள்ளனர். சம்பளப் பணம் அனுப்பப்பட்டதற்கான "ஆவணம்" இங்கே கிடைத்துள்ளது.

வேலணைக் கல்விக் கோட்ட அதிகாரிகள், ஆசிரியர்கள் யாவரும் இடம்பெயர்ந்து வந்து யாழ்ப்பாணத்தில் பணி புரிகிறார்கள்.

அவர்களை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வலிந்து போகச் செய்வதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. [உ-உ]

மக்களோ பட்டினியில்; கப்பலில் வந்ததோ உரம்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் பட்டினிச் சாவுக்கு ஆளாகி வரும் இந்த இக்கட்டான வேளையில் —

பருத்தித்துறைக்கு நேற்று முன்தினம் இரவு வந்து சேர்ந்த 'குமாரி' கப்பலில் உரமே கூடுதலாகக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கப்பலில் 850 மெற்றிக்தொன் அமோனியம் சல்பேற் உரமும், 650 மெற்றிக்தொன் அரிசியும், 850 மெற்றிக் தொன் மாவும், 90 மெற்றிக் தொன் சீனியும், மற்றும் வேறு சில சாமான் பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

[உ-5]

அமைதித் தீர்வு உருவானால் ராணுவம் அதை ஊக்குவிக்கும்

ஜெனரல் ஹமில்டன் சொல்கிறார்

கொழும்பு, நவ 20

வடக்கு - கிழக்கில் அமைதித் தீர்வு தொடர்பாகச் சாதகமான பதில் கிடைக்குமாயின் நாம் அதனை ஊக்குவிப்போம்.

இப்படி ஜெனரல் ஹமில்டன் வணசிங்ஹ கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

தீர்வுக்கு சாத்தியமான சூழ்நிலை ஏற்படும் வரை பாதுகாப்புப் படையினர் தமது நடவடிக்கைகளைத் தொடருவார் என்றும் ஜெனரல் வணசிங்ஹ கூறினார்.

அவரது பேட்டியின் முக்கிய பகுதிகள் சில வருமாறு:-

கேள்வி: பலம் பொருந்திய நிலையில் நாங்கள் இருக்கும் இந்தக் கட்டத்தில் அரசியல் தீர்வு இன்னும் சாத்தியமானதா?

பதில்: ஆயுதப் படைகளையும் பொலிஸையும் சேர்ந்தவர்களைத் தவிர ஏனையோர் [illegible] ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்க முடியாது.

யாழ்ப்பாணத்தைப் பிடிக்க வேண்டும்

கே: யாழ் குடாநாட்டைக் கைப்பற்றப் புதிய இராணுவ நடவடிக்கை ஏதாவது [illegible]?

ப: இது தவிர்க்க முடியாதது. நாம் யாழ்ப்பாணத்தை எடுக்க (பிடிக்க) [illegible]

[3 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முனி

மக்களை மரம் என்று நினைக்கப் [illegible] விருக்கினம்......!

26 நள்ளிரவில் மாவீரருக்கு அஞ்சலியும் சுடர் ஏற்றலும்

மக்கள் அனைவரையும் பங்கேற்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 20

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 26 ஆம் திகதி நள்ளிரவில், மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துதலும், சுடர் ஏற்றுதலும் இடம்பெறும். அவற்றில் தமிழீழ மக்கள் அனைவரும் உணர்வு பூர்வமாகப் பங்கேற்க வேண்டும்.

— இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் [illegible] முன்னெடுப்புப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

[illegible] விடிவிற்கான வெளிச்சங்களாகவும், எமது சுதந்திரத் தாகத்தின் விருட்சத்தின் வித்துக்களாகவும், தமிழீழத்தின் பிறப்பிற்கான போராட்டத்தில் இறப்பை ஏற்றுக் கொண்ட மாவீரர்களை [illegible] கடைப்பிடிக்கப்பட்ட [illegible] நாள் (தேசிய நாள்) எதிர்வரும் 27 ஆம் திகதி கொண்டாடப்பட இருக்கின்றது.

இந்நாளின் முதல் ஆறு நாட்களையும் உள்ளடக்கி எதிர்வரும் 21 ஆம் திகதி மாவீரர் வாரம் ஆரம்பமாகின்றது.

இவ்வாரத்தின் மிக உச்சமானதும், உணர்வுபூர்வமானதுமான நிகழ்ச்சி எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்

(3 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

தேனீக்களுடன் கூடுகள் விற்பனைக்கு உண்டு. இவை பல மாதங்களாக தேனீக்களால் சேர்க்கப்பட்ட வதைகளுடன் இராணி தேனீக்களுடனும் பெட்டிக் கூடுகள் சகிதம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:- பவேந்திரா பிறதேஸ், 47, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (18817)

மணமகள் தேவை

யாழ். இந்து உயர் செவ்வாய் உள்ள 27 வயது சுகாதார பரிசோதகருக்குப் பெண் தேவை. நட்சத்திரம்: பூராடம் பாகம் 55/16, ABCDE, 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [18826]

யாழ். இந்து 35 வயது U.K யில் P. H. D. படித்துக் கொண்டிருக்கும் மணமகனுக்கு பெண் தேவை. நட்சத்திரம்: பூசம், இரகபாவம் 10/16 ABCDE 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [18825]

மணப்பெண் தேவை

சொந்தத் தொழில் புரிவோர், அரசாங்க உத்தியோகத்தர், வெளிநாட்டில் தொழில் புரிபவர் ஆகிய ஆண்களுக்கு மணப்பெண்கள் தேவை. சேவை இலவசம். புதன்கிழமைகளில் சந்திக்கலாம். தொடர்பு:- த. சிதம்பரப்பிள்ளை, தலைவர் சனசமூக நிலையம், சங்கத்தானை, சாவகச்சேரி. (18822)

மணமகன் தேவை

25 தொடக்கம் 37 வரையிலான வயதுடைய ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், பொறியியலாளர்கள், டாக்டர்கள் பதவிகளிலுள்ள பெண்களுக்கு தரமான வரன்கள் தேவை. சேவை இலவசம். புதன்கிழமைகளில் சந்திக்கலாம். த. சிதம்பரப்பிள்ளை, தலைவர் சனசமூக நிலையம், சங்கத்தானை, சாவகச்சேரி. [18821]

இலவச திருமணசேவை

எமது இலவச சேவையில் 30 வயதுடைய தாவரபோசன, மிருகசீரிட B Sc. பெண்ணுக்கும், 28 வயதுடைய திருவோண M.B.B.S. பெண்ணுக்கும் வரன்கள் தேவை. குறிப்பு. விவரங்களுடனும் இரு முத்திரையிட்ட கவர்களுடனும் விண்ணப்பிக்கவும். து. விமல், 958/8, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (4392)

திருமண சேவை

திருமணம் செய்ய விரும்பும் ஆண், பெண் சாதகம் முழு விவரங்களுடன் 1-00 மணி தொடக்கம் 4 00 மணி தவிர்ந்த எல்லா நாட்களிலும் சந்திக்கலாம். தொடர்பு: நல்லூர் திருமண சேவை, [நல்லூர் வீடியோ சென்ரர்] 19, முருகேசர் ஒழுங்கை, மந்திரிமனைச் சந்தியடி, நல்லூர். [18829]

இடமாற்றம்

வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் சிகிச்சையளித்து வருகிறார். சகல நோயாளர்களும் வழமைபோல் சிகிச்சை பெறலாம். இடம்பெயர்ந்தோருக்கு சலுகை அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படும். [18590]

ஆய்வுக் கட்டுரை

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறை விதிகளுக்கு ஏற்ப, கணனி முறையில் கட்டிக்கொடுக்கப்படும். இ. சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/1001)

ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூட்டோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [சி-0798]

நீமியா உரம்

பருவம் தப்பிய உரம் பயிருக்குப் பாதகம் விளைவிக்கும். வேம்பிலிருந்து தயாராகும் நீமியா உரம் பயிருக்கு ஊட்டம் அளித்து, பூச்சி புழுக்கொல்லியாகவும் உதவுகிறது. நீமியா உரம் அனைத்து சேவைக் கடைகளிலும் கிடைக்கும். [illegible] (சி/0808)

இன்று செவ்வாய் மாற்றம்

இன்று (20-11-1991) விருச்சிகத்திலும், 31 - 12 - 1991 தனுசிலும் செவ்வாய் மாற்றம் குருவின் பார்வையைப் பெறுவதால் யுத்தம் தணியும். சமாதானம் ஆண்டு மலரும்: [சோதிடர், யாழ்ப்பாணம்) Prof: சந்திரதாஸன். [18824]

St. John's Church Parish Nursery School

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் திகதி மாணவர்களின் நலன் கருதி 01 - 12 - 1991 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

-நிர்வாகி.

(18772)

A/L PAPER CLASS

Zoology - திரு. அல்போன்ஸ் B Sc

திங்கள் } 2-30
புதன் }

ஆரம்பம்: 20 - 11 - 1991 (இன்று)

BOND INSTITUTES,
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4396)

---

2 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் பிரம்ம ஸ்ரீ கந்தசாமி ஐயர் நாகராசா ஐயர்

தாயின் மடியில்: 15-12-1945
ஆண்டவனடியில்: 11-12-1989

திதி: 20 - 11 - 1991

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
எல்லோரினதும் நெஞ்சங்களில் - வாழ்ந்த
உம்மை விதி பிரித்து
இரண்டாண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சத்தைவிட்டு அகலாது!

மனைவி, பிள்ளைகள்:-
சுரேஸ், சுதா, குகா.

பெரிய வேணியப் பிள்ளையார்-
கோவிலடி,
எழுதுமட்டுவாள்.

[4898]

ஜெயலலிதாவுக்கு டாக்டர் பட்டம்

சென்னை, நவ 20

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதவுக்கு சென்னைப் பல்கலைக்கழகம் இலக்கியக் கலாநிதிப்பட்டம் (டாக்டர்) வழங்க உள்ளது.

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

சித்தமருத்துவத் துறை - இடைக்காலப் பரீட்சை டிசம்பர் - 1991

1991 ஆம் ஆண்டு செப்டம்பர், ஒக்ரோபர் மாதத்தில் நடைபெற்ற 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் வருடாந்தப் பரீட்சையில் சித்தியெய்தத் தவறிய மாணவர்களுக்கு 1991 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் திகதி இடைக்காலப் பரீட்சை நடத்தப்பட உள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்கள் நவம்பர் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

- பதிவாளர்.

(சி 0914)

★திருமண அழைப்பு★

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி ஆண்டு கார்த்திகை மீ 4 ஆம் நாள் (20-11-1991) புதன்கிழமை பிற்பகல் 3-30 முதல் 5-30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்,

திருவளர் செல்வன் **பஞ்சாட்சரம்** அவர்களுக்கும்
திருவளர் செல்வி **ஜெயவதனி** அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் மணமாலை இல்லறத்தில் திருமாங்கல்ய தாரணம் நடாத்த உயர்ந்தோர் உறுதி செய்துள்ளனர். அத்தருணம் குடும்பத்தினருடன் வருகை தந்து மணமக்களை நல்லாசிகள் வழங்கி வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இரு வீட்டார் அழைப்பு)

திரு. திருமதி
அ. சீனியர்,
பொன்னம்பலம் வீதி,
காரைநகர்.

திரு. திருமதி
க. கந்தசாமி,
வட்டு - மேற்கு,
வட்டுக்கோட்டை.

(சி-0909)

A/L DAY CLASS

Chemistry - திரு. சிவசோதி B.Sc.

8-30 — அயன் சமநிலை
1-00 — IN ORGANIC

ஆரம்பம்; 20 - 11 - 1991 (இன்று)

BOND INSTITUTES,
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4395)

சாவகச்சேரி நகராட்சி மன்றம்

1992 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01 - 01 - 1992 தொடக்கம் 31 - 12 - 1992 வரையிலான காலப்பகுதிக்குக் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம் சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 02 - 12 - 1991 ஆம் திகதி பிற்பகல் 12.15 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

வியாபாரம்	கடை இல.	ஆகக்குறைந்த கேள்வித் தொகை ரூபா	கேள்வி வைப்பு பணம் ரூபா	படிவக் கட்டணம் ரூபா
1. சாவகச்சேரி நகரசபை பொதுச் சந்தை (சபையால் மாதாந்தம் அறிவிடப்படும் கடை, வாடகைகள் நீங்கலாக)		22 0000 00	1000 00	100 00
2. சாவகச்சேரி நகரசபை மீன்சந்தை (சபையால் மாதாந்தம் அறிவிடப்படும் கடை வாடகைகள் நீங்கலாக)		55,000 00	1000.00	100.00
3. ஆட்டிறைச்சிக் கடை என், எம். எஸ்.	1	11,000 00	1000.00	100.00
4. ஆட்டிறைச்சிக் கடை என் எம். எஸ்.	11	11,000 00	1000.00	100.00
5. மாட்டிறைச்சிக் கடை என். எம். எஸ்	111	27,500 00	1000.00	100 00
6. மாட்டிறைச்சிக் கடை என், எம். எஸ்.	11	22 000 00	1000 00	100.00
7. வாகனம் நிறுத்துமிடக் கூலிக் குத்தகை அறவிடுதல் சேவை		11,000 00	500 00	100 00
8. குப்பை கூளங்களை அகற்ற இரட்டை மாட்டு வண்டி / உழவு இயந்திரம் பெட்டி உட்பட வாடகைக்கு வழங்குதல்			500 00	100.00

மேற்படி வைப்புப் பணமும், கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்தப்படவேண்டிய இறுதி 02 - 12 - 1991 ஆம் திகதி நண்பகல் 12 30 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. வெற்றிகரமான கேள்விதாரரின் கூட்டுப்படிக்கைகளைக் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிகமான விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
செயலாளர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி. 18 - 11 - 1991

(சி 0011)

மாவீரர் தின விழா

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். கோட்டம்

இடம் : ரஸிக ரஞ்சன சபா மண்டபம்,
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்
காலம் : 21 - 11 - 1991 வியாழன் முற்பகல் 9-00

நிகழ்ச்சி நிரல் :

1. வரவேற்புரை — திரு. எஸ். சிவமோகன் (செயலாளர், த. க. நி.)
2. தலைமை உரை — திரு சி. வரதராஜன் (தலைவர், த. க. நி)
3. புதிய விஞ்ஞானக் கல்விக் கழக மாணவர்களின் புரட்சிப் பாடல் நிகழ்ச்சி
4. சிறப்புரைகள் –
   1. திரு. இரா. செல்வவடிவேல் (தலைவர், யா. கோ.)
   2. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்
5. பட்டிமண்டபம் –
   பொருள் : "மெல்லத் தமிழ் இனிச்சாகும்" என்ற பாரதியின் ஏக்கம்
   கனவாகிக் கலையுமா? நிஜமாகி நிலைக்குமா?

கனவாகிக் கலையும்	நிஜமாகி நிலைக்கும்
திரு. த. சிவகுமாரன்	திரு. பொன். அருணகிரிநாதன்
திரு. ப. நாகநாதன்	திரு. ஆ. திருமுருகன்
திரு. க. கலாகரன்	திரு. கோ. இராசலிங்கம்

நடுவர் : திரு. க. சொக்கலிங்கம், எம். ஏ. (சொக்கன்)

6. இசை நிகழ்ச்சி — "யாழோசை" வழங்கும்
   பேர்க்கால ராகங்கள்
   இயக்குனர் : யாழோசைக் கண்ணன்
7. நன்றியுரை — திரு. கே. பஞ்சரட்ணம் (செயலாளர் யா. கோ.)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(சி/1008)

மாவீரர் தின விழாக் குழு

உதயன்

உணர்வது எப்போது?

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதே இராணுவத்தின் முக்கிய பணியாக இருக்கும். முதலில் கிழக்கிலும், பின்னர் வடக்கிலும் தேர்தல்களை நடத்தக்கூடிய விதத்தில் இராணுவ நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் — இப்படிச் சொன்னவர் புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தின.

பாதுகாப்புப் படையினரின் பிரதான குறிக்கோள் வடக்கு - கிழக்கில் அரசாங்க நிர்வாகத்தை மீண்டும் இயங்க வைப்பதேயாகும் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் போது ஆயுதப் படையினர், தீவிரவாதிகளை நிராயுதபாணிகள் ஆக்குவர். தீவிரவாதிகளை நிராயுதபாணிகளாக்கினால் மட்டுமே வடக்கில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட முடியும் — இவ்வாறு தெரிவித்திருப்பவர் கூட்டுப் படைத் தலைமையகத்தின் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா.

இருவரும் தமக்குரிய புதிய பதவிகளை ஏற்றதும், இவ்வாறாகக் கூறியுள்ளனர். இருவர் சொன்னவையும் ஒரு பொதுவான கருத்தையே, ஒரே விதமான சிந்தனையையே சுட்டி நிற்கின்றன. அதாவது அரச நிர்வாகத்தை இயங்க வைத்தல் தேர்தலை நடத்துதல், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல் ஆகிய அரசியல் செயற்பாடுகளை இராணுவ நடவடிக்கைகள் மூலம் நடைமுறைப் படுத்தவே இராணுவ உயர் அதிகாரிகள் விரும்புகிறார்கள்

அதன் பொருட்டு இப்போது 77,000 துருப்புக்களைக் கொண்ட இராணுவத்துக்கு மேலும் 20,000 துருப்புகள் தேவையென்று ஹமில்டன் சொல்கிறார். அடுத்த புதியவரோ, இராணுவம் ஸ்தாபன ரீதியாக மாற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

ஏற்கனவே படைகளுக்குரிய செலவு உச்சத்துக்கு உயர்ந்துவிட்டதாக அரசாங்கத் தரப்பு எம். பிக்களே இப்போது கவலை தெரிவிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

ஆனால் இராணுவ அதிகாரிகளோ வடக்கு - கிழக்கு நிலையைத் தமக்குச் சாதகமாக்கி முப்படைகளையும் வளர்க்கிறார்கள்; மேலும் வளர்க்கப் பார்க்கிறார்கள்!

தென்னிலங்கை அரசியல்வாதிகளும், மக்களும் பாவங்கள்! எந்நேரமும் தங்களுக்கு எதிராக ஆயுதத்தைத் திருப்பக் கூடிய இராணுவத்தை வளர்க்கிறார்கள். பாம்புக்கு பாலை ஊட்டி வளர்த்தாலும் அது ஒரு நாள் கொத்தவே செய்யும் என்பதைப் புரிந்து கொள்கிறார்கள் இல்லை ஏற்கனவே தேவைக்கு விஞ்சிய தொகையாகிவிட்ட இராணுவத்தை மேலும் ஊட்டி, ஊட்டி வளர்க்கிறார்கள்!

தமிழர்களின் உரிமைகளை வழங்கி, அவர்களின் அரசியல் அபிலாசைகளுக்கும் மதிப்பளித்து, இனப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வைக் கண்டுவிட்டால்—

வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவும், சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டவும், தேர்தல் நடத்தவும் இராணுவத்தின் உதவி தேவைப்படாது.

இதனை சிங்களத் தலைவர்கள் உணர்ந்து, உரிய விதத்தில் செயற்படாவிடில், தெற்கில் விரைவில் ஒரு நாள் இராணுவ ஆட்சி தனது குரூர முகத்தைக் காட்டும் என்பதை மறந்துவிடக்கூடாது.

1,100 குடும்பங்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதையும் இழக்க இயலாதென்றால், தமிழீழம் எவ்வாறு அமையும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்:

பணமும், பொருளும் மனித வாழ்வுக்கேயன்றி, பணத்திற்கும் பொருளுக்குமாக மனித வாழ்வல்ல. தமிழர்கள் திரைகடலோடித் திரவியம் தேடியவர்கள் பொருளீட்டலிலும், சேமிப்பதிலும் பெயர் பெற்றவர்கள்; அதனால்தான் விடுதலைப் போருக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்கிறோம்:

வசதி படைத்தவர்கள் தாமாகவே முன்வந்து பங்களிப்புச் செய்யவேண்டும்: எமது செல்வத்தால் எமது அடிமை விலங்கை ஒடிக்கமுடியாதாயின் அந்தச் செல்வத்தை அந்நியனை அனுபவிக்க விட்டுவிட்டு அழிந்துபடப் போகிறோமா?

தமிழினத்தின் அறிவாற்றலும் முயற்சியும் அதன் விடுதலைக்குப் பயன்படவில்லையானால், அந்நியனின் வளமான வாழ்விற்கே பயன்படுமானால், தமிழினத்தின் மீதான அடிமை விலங்கு அறுபடுவது எப்போது?

ஒப்பற்ற மாபெரும் வரலாற்றுத் தலைவனை தமிழீழ மக்கள் இன்று பெற்றிருக்கிறோம் அவனுடைய காலத்தில் நம் எம்மிடமுள்ள அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்தி, முயற்சிசெய்து எமது விடுதலையைப் பெற்றுவிட வேண்டும்: தவறிவிடுவோமானால், வரலாற்றுப் பெரும் பழிக்கு ஆளாக நேரிடும்; வாய்ப்பைத் தவறவிட்டுவிட்டோமே என்று பின்னால் வருந்துவதற்குக் கூட தமிழர்கள் இந்த மண்ணில் இருப்பார்களா என்பது ஐயமே;

தமிழீழ மண்ணை நேசிக்கின்ற தமிழர்களில் தமிழீழ மீட்பு நிதிக்கு இதுவரை தாமாகவே மனமுவந்து பங்களிப்புச் செய்த பல விசுவாசமான மனத் தமிழ்க் குடும்பத்தாருக்கு தலைசாய்த்து எமது நன்றியைத் தெரிவிக்கிறோம். அவர்களில் ஆயிரத்து நூறு குடும்பத்தாருக்கான [illegible], தமிழீழ மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தம்முயிரைத் தற்கொடையாகத் தந்த தாயவர்களின் நினைவு வாரமான மாவீரர் வாரத்தில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்: — என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [அ]

இந்தியத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திய அதிகாரிகள் தம்முடன் பேசமாட்டார்கள் என்று தாம் எண்ணுவதாகவும் அவர் கூறினார்.

"இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலாளர் டிக்ஸித்தைச் சந்திப்பீர்களா?" என்ற கேள்விக்கு—

"டிக்ஸித் டிசம்பர் முதலாம் திகதிதான் பதவியேற்கிறார். அவர் புதுடில்லியில் இருந்தால் நான் அவரைச் சந்திப்பேன்" என்று தொண்டமான் பதிலளித்தார்

ஜனாதிபதி பிரேமதாசாவின் எழுத்து மூலமான அனுமதி பெற்றே தாம் புதுடில்லி செல்வதாகவும் அவர் சொன்னார். [உ-எ]

எட்டு இடங்க...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இவற்றுக்கு மேலதிகமாக தமிழீழ காவல்துறையின் யாழ் நகரப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு தனியாக இயங்கும்;

இப்பிரிவே குடாநாட்டில் போக்குவரத்துச் சம்பந்தமான சகல சட்டங்களையும் கையாளும்;

காவல்துறையின் சேவை குடாநாட்டுக்கு வெளியில் தமிழீழப் பகுதி எங்கும் படிப்படியாக விஸ்தரிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது

26 நள்ளிரவு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை நள்ளிரவு சரியாக 12 மணிக்கே நிறைவுறுகிறது.

எதிரியிடமிருந்து எம்மால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள அனைத்து ஆலயங்களின், தேவாலயங்களின், கல்லூரிகள்; தனியார் நிறுவனங்கள் அனைத்திலுமுள்ள பெரிய மணிகள் சரியாக 12.00 மணிக்கு அடிக்கப்படும்.

அந்நேரத்தில் அனைவரும் விழித்திருந்து குடும்பத்தினரையும், அயலவரையும் தயார் நிலைப்படுத்தி மணிஒலி கேட்டதும் 2 நிமிடமும் மறைந்த மாவீரர்களின் நினைவாக அஞ்சலி செய்ய வேண்டும்.

இந்த இரு நிமிடங்களும் எழுந்து நின்று தலைகுனிந்தபடி மனதில் மாவீரர் நினைவு அலைமோத "எங்களுக்காக மடிந்த உடன் பிறப்புக்களே! உங்களை நாங்கள் மறக்கவில்லை. உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சில் நிழலாடும்" — என்பதை மனதில் கொண்டு மௌன அஞ்சலி செய்தல் வேண்டும்.

மணி ஒலி ஓய்ந்ததும் தொடர்ந்து 12-03 மணிக்கு மாவீரர் சுடர் ஏற்றும் நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

முன்கூட்டியே தயாராக வைத்திருக்கும் தீபந்தங்களையோ, சிட்டி விளக்குகளையோ வேறு ஒளி தரக்கூடிய மாதிரியான பொருட்களையோ எங்கும் ஒளிவெள்ளம் பரவும்படி ஏற்றுதல் வேண்டும்

தெருக்களில், வீதிகளில், வீடுகளின் வாசல்களில், மதில்களில், பொது நிறுவனங்களில், கோவில்களில் தேவாலயங்களில், பாடசாலைகளில் எங்கெங்கு ஒளிச்சுடர் ஏற்றமுடியுமோ அங்கெல்லாம் தனித்தோ, கூட்டாகவோ, ஊர்கூடியோ தீபச்சுடர்களை ஏற்ற வேண்டும்.

அந்த வேளையில் பார்க்கும் இடமெல்லாம் ஒளிவெள்ளம் போன்று மாவீரர் நினைவாக சுடர்கள் ஏற்றப்படவேண்டும். "உங்கள் நெஞ்சில் கனன்ற விடுதலைத் தீயை அணையாது நாங்கள் ஏற்றி வைத்துள்ளோம்" என்பது போல இந்தச் சுடரேற்று வைபவம் நிகழ வேண்டும்;

—இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

தமிழீழ--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோசி, மூத்த உறுப்பினர் திரு இளங்குமரன் (பேபி), யாழ் மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச்செல்வன் (தினேஷ்) ஆகியோர் உட்பட விடுதலைப் புலிகளின் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

காவல்துறை இயங்க ஆரம்பித்ததை அடுத்து ஈழப் பகுதியில் சட்ட, ஒழுங்கை நிலைநாட்டுவது சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் அது கையாளும் என காவல் துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஈழத் தமிழரின் வரலாற்றில் தங்களுக்கென அவர்கள் ஒரு தனியான காவல் துறையை அங்குரார்ப்பணம் செய்திருப்பது ஒரு முக்கிய நிகழ்வாகும் என்றும் அவர் சொன்னார்.

எமது மக்களின் வாழ்க்கைக்கு உகந்ததான சட்டங்களை அனுசரித்தே காவல் துறையின் நடவடிக்கைகள் அமையும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஈழத் தமிழரின் வாழ்க்கை முறையை மேம்படுத்தும் முழு முயற்சியில் காவல்துறை ஈடுபடும் என்று குறிப்பிட்ட அவர், ஈழத் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் அது உரிய பங்களிப்பை [illegible]

ஜி. சீ. ஈ. (சா.த) பரீட்சை நேர அட்டவணை

யாழ்ப்பாணம், நவ. 20

எதிர்வரும் டிசம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. [சாதாரண] தரப் பரீட்சை நேர அட்டவணை வருமாறு:-

டிசம்பர் 9 —	மு. ப.	8.30 — 9.15 —	தமிழ் மொழியும் இலக்கியமும் I
		9.45 — 11.45 —	தமிழ் மொழியும் இலக்கியமும் II
	பி. ப.	1.00 — 3.00 —	தமிழ் மொழியும் இலக்கியமும் III
டிசம்பர் 10 —	மு. ப.	8.30 — 9.30 —	ஆங்கில மொழி I
		9.45 — 11.45 —	ஆங்கில மொழி II
	பி. ப.	1.00 — 2.00 —	சமயம் I
		2.15 — 4.15 —	சமயம் II
டிசம்பர் 11 —	மு. ப.	8.30 — 11.30 —	கணிதம் II
	பி. ப.	1.00 — 2.00 —	கணிதம் I
		2.15 — 4.15 —	தட்டெழுத்து I ஆம் தொகுதி
டிசம்பர் 12 —	மு. ப.	8.30 — 11.30 —	விஞ்ஞானம் II
	பி. ப.	1.00 — 2.00 —	விஞ்ஞானம் I
		2.15 — 4.15 —	தட்டெழுத்து II ஆம் தொகுதி
டிசம்பர் 13 —	மு. ப.	8.30 — 11.30 —	வரலாறும் சமூகக் கல்வியும் II
	பி. ப.	1.30 — 2.30 —	வரலாறும் சமூகக் கல்வியும் I
		2.45 — 4.45 —	தட்டெழுத்து III ஆம் தொகுதி
டிசம்பர் 14 —	மு. ப.	8.30 — 9.30 —	தொழில் நுட்பப் பாடம் I
		9.30 — 11.30 —	தொழில் நுட்பப் பாடம் II
		9.00 முதல் —	சுருக்கெழுத்து
		8.30 — 11.30 —	வர்த்தகமும் கணக்கியலும் II
	பி. ப.	1.00 — 2.00 —	வர்த்தகமும் கணக்கியலும் I
		2.15 — 4.15 —	தட்டெழுத்து IV ஆம் தொகுதி
டிசம்பர் 16 —	மு. ப.	8.30 — 9.30 —	அழகியற் பாடம் I [சித்திரம்/நாட்டியம்/சங்கீதம்]
		10.00 — 12.00 —	அழகியற் பாடம் II
	பி. ப.	1.00 — 3.00 —	அழகியற் பாடம் III [சித்திரம்]
டிசம்பர் 17 —	மு. ப.	8.30 — 11.45 —	இரண்டாம் மொழி I [தமிழ் / சிங்களம்)
		9.45 — 11.45 —	இரண்டாம் மொழி II
	பி. ப.	1.00 முதல் —	விருப்பத்திற்குரிய ஆங்கிலம்
டிசம்பர் 18 —	மு. ப.	8.30 — 11.30 —	சமஸ்கிருதம்
		8-30 முதல்	விருப்பத்திற்குரிய சிங்களம் / தமிழ்

வயிற்றோட்டம்: தாய் மரணம்

வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்ட தாய் ஒருவர் நேற்று மரணமானார். [illegible] இருந்து மாட்டு வண்டியில் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படும் வழியிலேயே அவரின் உயிர் பிரிந்துவிட்டதாக அறிய வந்தது

சுமார் பத்து நாட்களுக்கு முன் குழந்தை ஒன்றைப் பிரசவித்த 37 வயதான இந்தத் தாய்க்கு நேற்று முன்தினமே வயிற்றோட்டம் கண்டதாம். போக்குவரத்து வசதி இல்லாததால் நோயாளியை உடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வர முடியாமற் போனதாகச் சொல்லப்பட்டது. [அ-15]

சரித்த---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது தெரிந்ததே;

திரு. ரத்வத்தை இங்கு வந்து திரும்பிய சில தினங்களில் முதலாவது உணவுக் கப்பல் காங்கேசனுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. [அ-8]

அமைதித்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அது எந்தநேரத்திலும் நடக்க முடியும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னி, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களைப் பிடிப்பதற்குத் துருப்புகள் தயாராக வேண்டும்.

கே: ஆயுதப் படைக்குப் புதிதாக ஆட்சேர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

ப: ஆயுதப்படைக்குப் புதிதாக 20,000 பேர் தேவைப்படுகிறது; அதிக படையினர் திரட்டப்படுவது முக்கியமானது. ஆனால் வரையறுக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்குள் நாம் செயற்பட வேண்டியுள்ளது. குறைந்தது 20 ஆயிரம் பேரைச் சேர்க்கும் சாத்தியம் குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

ஈழ யுத்தத்தின் கடைசிக் கட்டத்துக்கு ஆயுதப் படையினருக்கு மேலும் பலமூட்டவே புதிய படையினர் தேவைப்படுகின்றனர். இதன்மூலம் படையினருடன் நாம் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தலாம். ஆனால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் எமது நிலையைப் பலப்படுத்த படையினர் தேவைப்படுகின்றனர். [அ-எ]

மட்டக்களப்புப் பகுதியில் இரண்டு தமிழர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ. 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினரும், சமூகவிரோதக் கும்பல் ஒன்றும் சேர்ந்து தமிழ் மக்கள் மீது நடத்திய வன்முறை நடவடிக்கைகளின் போது இரு தமிழர்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலையடிவெட்டை இராணுவத்தினர் 11 ஆம் திகதி மாவடி முன்மாரி கிராமத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியசமயம் அந்த கிராமத்தைச்சேர்ந்த சாமித்தம்பி தம்பிராசா (49 வயது) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

15 ஆம் திகதி காக்காச்சி வெட்டைப் பகுதியைச் சுற்றி

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூறினார்:

மக்களின் துன்பங்களுக்கு ஒரு முடிவைக் கொண்டுவரக் கூடியதான நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணுவதற்கு எதிர்கட்சி முழு ஆதரவளிக்கும் என்று அனுரா அப்போது உறுதியளித்தார்.

"நான் உங்களை நம்புகின்றேன்; ஆனால் பிரச்சினையை உள்ளத் தூய்மையுடன் அரசாங்கம் அணுகுகின்றதா என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை"- என்று அனுரா மேலும்கூறினாராம்.

"மங்கள முனசிங்கா தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று உள்ளபடியால் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுகளை அந்தக் குழு ஊடாக சமர்ப்பிக்கலாமே!-என்றும் அனுரா ஆலோசனை கூறினாராம்.

அதன் பின்னர் திரு. தொண்டமான், திரு. அத்தாவுட செனவிரத்தின (ல. ச. ச. க.), ராஜா கொலுரே (கம்யூ.), சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ. பி. ஆர். எல். எவ்.) ஆகியோரை நாடாளுமன்றத்தில் உள்ள தனது அலுவலகத்தில் வைத்து தனித்தனியே சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

அப்பேச்சுக்கள் குறித்த விபரங்களை திரு தொண்டமான், மீண்டும் ஜனாதிபதியைச் சந்தித்து தெரிவித்தார்; அதன் பின்னர் திரு. தொண்டமான் கடந்த வெள்ளிக்கிழமை புதுடில்லி பயணமானார்.

"விடுதலைப் புலிகளின் பதில் கடிதம் குறித்து ஜனாதிபதியுடன் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களை நடத்த எண்ணியுள்ளேன்" என்று புதுடில்லி புறப்படு முன்னர் அவர் கூறினார்.

இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு நாம் கொழும்பு திரும்பியதும் அப்பேச்சுக்கள் இடம்பெறும் என்றும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகள் இப்பேச்சுக்களை நடத்துவதற்கான வழிமுறை [illegible] வருவதாகவும் அமைச்சர் தொண்டமான் கூறினார்.

எழுச்சி வார கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 20

மாவீரர் எழுச்சி வாரத்தின் இறுதி நாளான இன்று இரண்டு இடங்களில் பிரதான எழுச்சி வாரக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

வலிகாமம் பிரிவில், தெல்லிப்பழை துர்க்காபுரம் சைவப்பிரகாச பாடசாலையிலும்—

வடமராட்சிப் பிரிவில், தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய மைதானத்திலும் — இரவு 7 மணிக்கு எழுச்சி வாரக் கூட்டங்கள் இடம்பெறும். [அ]

செல்லக்கிளி நினைவுத் தூபி திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 20

1983 ஜூலை 23ஆம் திகதி அன்று திருநெல்வேலியில் நடத்தப்பட்ட இராணுவ வண்டி மீதான தாக்குதலின் போது, நேரடி மோதலில் உயிர்நீத்த லெப். செல்லக்கிளியின் நினைவாக அமைக்கப்பட்ட தூபி இன்று மாலை 5 மணிக்குத் திறந்து வைக்கப்படும்.

திருநெல்வேலியில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்ட அதே இடத்திலேயே லெப். செல்லக்கிளியின் (சதாசிவம் செல்வநாயகம் - கல்வியங்காடு) நினைவுத்தூபி நிறுவப்பட்டிருக்கிறது.

நினைவுத் தூபி திறப்பு விழாவைத் தொடர்ந்து இன்று மாலை 6 மணிக்கு திருநெல்வேலி [illegible] கோவிலில் நினைவுக் கூட்டம் நடைபெறும். (அ)

80 ஆயிரம் போலி டாக்டர்கள்

கொழும்பு. நவ. 20

நாட்டில் தற்போது 80 ஆயிரம் போலி டாக்டர்கள் செயற்படுகிறார்கள்;

சுதேச மருத்துவ சங்கத் தலைவர் டாக்டர் பேர்னாட் டி.செய்ஸா, கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

முன்பு ஆஸ்பத்திரி சிற்றூழியர்களாக இருந்தவர்கள், தோட்ட ஆஸ்பத்திரி ஊழியர்கள், மருத்துவ ஓடலிகள், மத்திய கிழக்கு நாடுகளில் தாதிமாராகக் கடமையாற்றிவிட்டு நாடு திரும்பியவர்கள் ஆகியோரே பெரும்பாலும் போலி மேற்கத்திய வைத்தியத்தில் ஈடுபடுகின்றனர் என்றும் அவர் கூறினார்:

ஆயுர் வேத வைத்தியத்தில் தராதரம் பெற்ற ஐந்து அல்லது ஆறு வருட அனுபவம் கொண்டவர்களும் ஒரு மருத்துவச்சாலையிலோ அல்லது டிஸ்பென்சரியிலோ சிறிது காலம் பயிற்சி பெற்றுவிட்டு, மேற்கத்திய வைத்தியம் செய்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். [இ-த]

லெப். கேணல் மதி
ஞாபகார்த்த உதைபந்தாட்ட
சுற்றுப் போட்டி

முன்னாள் யாழ் மாவட்ட தளபதி லெப். கேணல் மதி அவர்களின் ஞாபகார்த்தமாக மல்லாகம் R.D S. விளையாட்டுக்கழக ஆதரவில் 11பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடாத்தப்பட உள்ளது பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் கீழ்க்கண்ட முகவரியில் விண்ணப்ப படிவத்தினைப் பெற்று, 28-11-1991 க்கு முன் பூர்த்தி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

நிருசன் ரெக்ரைல்ஸ்,
மல்லாகம் சந்தி,
மல்லாகம்.

- *R. D. S.* விளையாட்டுக் கழகம்.

[18828]

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
20
—
07
—
1984

ஆண்டவன் அடியில்:
29
—
11
—
1989

செல்வி

சித்திரகலா அமரசேனாபதி

கண்ணீர் பூக்கள்

அன்பே அமுதே அன்றலர்ந்த
செந்தாமரையே பண்பே!
பவளமே பாங்கான பெண் மயிலே!
பாசமுடன் எமை விட்டு
பறந்தோடிப் போனதென்ன
கண்ணே உனை வெறுத்தே!
காலமெல்லாம் எம்மோடு
கலந்துறவாடி இருப்பாயென
காத்திருந்த எமை மறந்து
கடுகதியில் போனதென்ன!
இங்கு நம் மக்கள் இன்னலுறும்
இழி நிலையை இனிமேலும்
உன் கண் எவ்வளவும் பார்க்க
இயலாது என்பதனால்
எம்முயிரே சித்திராவே
ஒரு நொடியில் போனாயோ!

உமது பிரிவால் வாடும்:
ஐயா, அம்மா, அண்ணன்,
அப்பாச்சி, அம்மாச்சி, குடும்பத்தினர்.

சுதா பவனம்,
மயிலியதனை, தொண்டைமானாறு. (18720)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட் யினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-11-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கமே வினாத்தாள் எடுத்துவரும்!

யாழ், மாவட்டத்துக்கு ஜி. சீ. ஈ (சாதாரண) தரப் பரீட்சை வினாத் தாள்களை எடுத்துவரும் பொறுப்பு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது;

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடந்த பரீட்சை தொடர்பான கூட்டத்தில் இதுபற்றி முடிவு எடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்துக்கான வினாத்தாள்களை ஐ. நா. அகதிகள் தூதரகமும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வினாத் தாள்களை ஐக்கிய இராச்சிய இளைஞர் பாதுகாப்பு நிதியமும், கிளிநொச்சி மாவட்டத்துக்கான வினாத்தாள்களை ''ஒக்ஸ்பாமும்'' எடுத்துச் சென்று விநியோகிக்கும் என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. [உ-த]

அனுமதி அட்டைகள் 25 இல் வரும்; காகிதாதிகள் வந்து சேர்ந்தன!

யாழ்ப்பாணம், நவ 20

ஜி. சீ. ஈ. [சாதாரண தர] பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனுமதி அட்டைகளும், வினாத் தாள்களும் தவிர்ந்த ஏனைய காகிதாதிகள் கப்பல் மூலம் நேற்று பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன;

பரீட்சை நிலையங்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள் தெரிவுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. [உ-த]

1990 டிசம்பர், 1991 டிசம்பர்

2 ஜி. சீ. ஈ. பரீட்சைகளுக்கும் ஒரே வினாத்தாள்களே!

சமூகக்கல்வியில் மட்டும் மாற்றம்

யாழ்ப்பாணம், நவ 20

1990, 1991ஆம் ஆண்டுகளுக்குரிய ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஒரே மாதிரியான வினாத் தாள்களே வழங்கப்படும். பரீட்சையும் ஒரே தினத்திலேயே நடைபெறும்.

பரீட்சைத் திணைக்களத் தகவல் தொடர்புடைய வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இந்தப் பரீட்சைகள் மூன்று நிலைகளில் நடத்தப்படவிருக்கின்றன.

1990ஆம் ஆண்டுக்குரிய பழைய பாடத் திட்டம், 1990ஆம் ஆண்டுக்குரிய புதிய பாடத்திட்டம், 1991ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டம் என்ற மூன்று பிரிவுகளில் பரீட்சைகள் நடைபெறும்.

1990ஆம் ஆண்டு பழைய பாடத்திட்ட மாணவர்களுக்கு தனியான வினாத்தாளும் —

1990ஆம் ஆண்டு புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கும், 1991ஆம் ஆண்டு புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கும் ஒரே வினாத்தாள்களும் வழங்கப்படும்.

ஆனால் சமூகக்கல்விப் பாடத்தில் மட்டுமே வெவ்வேறு வினாத் தாள்கள் வழங்கப்படும்.

ஆனால் சமூகக் கல்விப் பாடத்தில் மட்டும் வெவ்வேறு வினாத்தாள்கள் வழங்கப்படும்.

1990 புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கு 'சமூகக் கல்வி' வினாத்தாளும்—

1991 புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கு 'சமூகக் கல்வியும் வரலாறும்'' என்ற பாட வினாத்தாளும் வழங்கப்படும்.

''சமூகக் கல்வியும் வரலாறும்'' பரீட்சை தொடர்பான முன்னோடி வினாத் தாள், யாழ் கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளது இரண்டொரு தினங்களில் இது சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்படும் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-த]

புலமைபரிசில் பரீட்சை முடிவு அடுத்த சில தினங்களில் வரும்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். மாவட்டத்தில் நடந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் கல்வி அமைச்சால் மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் இதனை கொழும்பில் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை முடிவுகளை பரீட்சை ஆணையாளர் கல்வி அமைச்சுக்கு இருமாதங்களுக்கு முன்னரே அனுப்பி விட்டார் என்றும்—

அமைச்சர் இல்லாத காரணத்தால் அவை அங்கு தேங்கிக் கிடந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் நடத்திய பேச்சுக்களை அடுத்து பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மாகாண சபை, பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு பரீட்சை முடிவுகளை அனுப்பி வைக்கும். [இ-த]

வசதியற்ற குடும்பங்களுக்கு ஒரு வார கால நிவாரணம்

நாளை வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ 20

யாழ். மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 700 குடும்பங்களுக்கு நாளை 21ஆம் திகதி ஒருவார உலர் உணவுப் [illegible] நிவாரணமாக வழங்கப்படவுள்ளன.

பங்கீட்டு அட்டையில் தரப்பட்டு வழங்கப்படும் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்யமுடியாத நிலையில் இந்தக் குடும்பங்கள் உள்ளதாலேயே இந்த [illegible] செய்யப்பட்டுள்ளது. [இ-த]

இலங்கைக்கு வந்தது ஏன் என்று அமைதிப்படைக்குத் தெரியாதாம்!

இந்தியாவின் முன்னாள் தளபதி தகவல்

இலங்கைக்கு நாங்கள் ஏன் அனுப்பப்பட்டோம் என்ற தெளிவு இந்திய அமைதிப் படையினருக்கு ஏற்படவில்லை. அதுவே அமைதிப் படையின் முழுத் தோல்விக்குக் காரணமாகும்:

இந்தியாவின் முன்னாள் தளபதி ஜெனரல் மானெக்ஷா இத்தகவலை வெளியிட்டார்.

"'இலங்கையில் இந்திய அமைதிப்படை'' என்ற நூலை அண்மையில் அவர் வெளியிட்டு வைத்தபோது அவர் மேலும் சொன்னதாவது:

இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய அமைதிப்படை விடுதலைப் புலிகளை ஒழிப்பதில் தோல்வியடைந்ததற்குக் காரணம் அமைதிப் படைக்கு சரியான நோக்கம், எட்ட வேண்டிய இலக்கு ஆகியன அறிவிக்கப்படவில்லை என்பது தான்.

தற்போது இலங்கை இராணுவம் பெரும் வெற்றியைச் சந்தித்து வருகின்றது. இதற்குக் காரணம், இலங்கை அரசு இராணுவத்திடமிருந்து என்ன எதிர்பார்க்கிறது என்பதை இராணுவம் தெரிந்து வைத்துள்ளது. — என்றார்.

அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய இந்தியாவிற்கான இலங்கைத்தூதர் திரு. நெவில் கனகரட்ன:— "இந்திய அமைதிப்படை ஓர் ஆக்கிரமிப்புப் படையோ முரட்டுப்படையோ அல்ல. இலங்கை அரசினால் அழைக்கப்பட்டபடையே இது''— என்று குறிப்பிட்டார்.

கொடியேற்று வைபவம்

மாவீரர் வாரம் ஆரம்பமாகும் நாளை வியாழக்கிழமை, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகத்தில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றும் வைபவம் நிகழும்.

அன்று காலை 8 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்ச்சியில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிப்பர்: பண்டிதர் வீ. பரந்தாமன் தேசியக் கொடியை ஏற்றி வைத்த பின்னர் உரையரங்கும் இடம்பெறும். (அ)

சம்பளம்

யாழ்ப்பாணம், நவ. 20

காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான மூன்று மாதச் சம்பளம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு---

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வைத்த படையினர் மோகன் என்பவரைக் கைது செய்து [illegible] எனவும்—

16 ஆம் திகதி சந்தி வெளிப் பகுதியில் கணபதிப்பிள்ளை இந்திரம் [20 வயது] என்பவரைச் சுட்டுக் கொன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மரண அறிவித்தல்கள்

செல்வி மகேஸ்வரி தம்பு

செல்வி மகேஸ்வரி தம்பு [அச்சி] (முன்னாள் போதனாசிரியர், யாழ். விவசாய பாடசாலை, திருநெல்வேலி) அவர்கள் 16-11-1991 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பு அவர்களின் புதல்வியும், பத்மா நடராசா, இராசராசா, காலஞ்சென்ற செல்வராசா, யோகேஸ்வரி துரைரட்ணம், புவனேஸ்வரி சுந்தரம், சரோஜினி தேவி சத்தியமூர்த்தி, சுந்தரதேவி பத்மநாதன், கமலாதேவி கனகலிங்கம், குணபூஷணி ஏகாம்பரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரலட்சுமி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் 18-11-91 திங்கட்கிழமை நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்,

தகவல்:

358/8, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்;

D. பரதன்

(18831)

திருமதி மாகிறேட் பஸ்தியாம்பிள்ளை

கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 44, சோமசுந்தரம் ஒழுங்கையில் வசித்தவருமாகிய திருமதி மாகிறேட் பஸ்தியாம்பிள்ளை நேற்றுக் காலமானார்,

இவர் நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்ற சூசைப்பிள்ளை பஸ்தியாம்பிள்ளையின் [தம்பையா] அன்பு மனைவியும், திருமதி செல்வம் வேதநாயகம் [இளைப்பாறிய ஆசிரியை, புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்], திருமதி ஸ்ரெலா நீக்கலஸ் [இளைப்பாறிய ஆசிரியை, புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை], செல்வி சிறியடா பஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திருமதி கிறிஸ்ரீனா முத்தம்மா ஆசீர்வாதம், திருமதி யோசப்பின் சவரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், ம. வேதநாயகம் [இளைப்பாறிய [illegible], கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்], திரு. ஐவன் நீக்கலஸ் [ஆசிரியர், பண்டிவிரிச்சான் அ. த. க. பாடசாலை], ஆகியோரின் மாமியாரும், Dr. கிறேசியன் [அமெரிக்கா], எறிக் டறன் [லண்டன்], பிறயன் [கனடா], றேசன் [நோர்வே], கிறிசான் [மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்] ஆகியோரின் பேரனும், [illegible] அன்ரனியின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை காலை 10 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்திற்கு நல்லடக்க ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின் புனித [illegible] சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

44, சோமசுந்தரம் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
திரு. ம. வேதநாயகம்

(18773)